# மன்னா

## CSI தமிழ் திருச்சபை அலைன்





இதோ நான் அவர்களுக்குச் சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி அவர்களைக் குணமாக்கி அவர்களுக்குப் பரிபூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன்.

எரேமியா 33:6

பொழிவு12 செப்டம்பர் 2018 ஆகாரம் 09

Rev. Ranjit Suthir
from Sharjah
Kanyakumari Diocese



Harvest Festival auction



Men's Retreat at the Parsonage



Group discussion and presentation





## 2019 செப்டம்பர் மாத ஊழியங்கள்
## Service / Ministry in the Month of September 2019

| | | |
|---|---|---|
| 06th Sep 11:00AM–1:00PM | உபவாச ஜெபக்கூடுகை | ஆயர் இல்லம் |
| 06th Sep 7:00PM – 9:00PM | பரிசுத்த திருவிருந்து ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 13th Sep 7:00PM – 9:00PM | மாலை ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 20th Sep 7:00PM – 9:00PM | பரிசுத்த திருவிருந்து ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 21st Sep 7:00PM – 9:00PM | பெண்கள் ஐக்கிய சங்கம் ஜெபகூடுகை | ஆயர் இல்லம் |
| 27th Sep 7:30PM–8:30PM | மாலை ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 30th Sep 11:30PM-12:30AM | மாத இறுதி மற்றும் ஆகஸ்ட் மாத துவக்க ஆராதனை | ஆயர் இல்லம் |

திருச்சபையின் ஆராதனைகளுக்கு வருவதற்கு வாகன வசதிகள் தேவைப்படுமாயின் நீங்கள் கீழ்க்கண்ட தொலைபேசியில் தொடர்பு கொண்டால், வாகன வசதி செய்துதரப்படும்.

**050 586 8173 / 056 441 1225 / 050 482 1006**

## உள்ளே


ஆயர் மடல்
திருமறை தியானப்பகுதி
செயலரிடமிருந்து
வேதாகம களஞ்சியம்
மிஷனரி சுயசரிதை
கட்டுரைகள்
Youth Special
பாடல் பிறந்த கதை
Children's Corner
வேத வினா விடை போட்டி
பிறந்த நாள்
திருமண நாள்
தெரிந்து கொள்வோம்
தினசரி வேதவாசிப்பு


## CSI தமிழ் திருச்சபை அலைன் ஊழியங்கள் (பொது)

### மெயின் ஒர்ஷிப் ஹால் – ஒயாசிஸ் மருத்துவமனை வளாகம், அல்–அய்ன்
Main Worship Hall – Oasis Hospital Campus, Al-Ain, UAE

| | | |
|---|---|---|
| 1st& 3rd Fridays / வெள்ளி | 7:00 PM | Communion Service /திருவிருந்து ஆராதனை |
| 1st& 3rd Fridays / வெள்ளி | 6:30 PM | Men's Prayer / ஆண்கள் ஐக்கிய சங்கம் |
| 2nd & 4th Fridays / வெள்ளி | 7:00 PM | Evening Regular Service / மாலை ஆராதனை |
| 2nd & 4th Fridays / வெள்ளி | 6:30 PM | Bible Study / வேதாகம வகுப்பு |
| Friday's / வெள்ளி | 6:15 PM | CBS / சிறுவர் வேதாகம வகுப்புகள் |

### ஆயர் இல்லத்தில் நடைபெறும் ஊழியங்கள்
Ministries at Parsonage

| | | |
|---|---|---|
| 1stFriday / வெள்ளி | 11:00AM | Fasting Prayer / உபவாச ஜெபம் |
| 2nd & 4th Sat / சனிக்கிழமை | 7:00 PM | Gospel Ministry / சுவிசேஷ ஊழியம் |
| 3rd Sat / சனிக்கிழமை | 7:30 PM | Women's Prayer / பெண்கள் ஐக்கிய சங்கம் |
| Wednesday's / புதன்கிழமை | 7:30 PM | Bible Study / வேதாகம வகுப்பு |
| Last Day of Every Month மாதத்தின் கடைசி நாள் | 11:30PM | Month End & Beginning Prayer மாத இறுதி/புதிய மாத துவக்கஆராதனை |

# ஆயர் மடல்...



## கிறிஸ்த்துவுக்குள் நீதிமான்களே!

திரியேக தேவனின் ஆசீர்வாதத்தினால் சமாதானமாகவும், சந்தோஷமாகவும், மிகவும் பாதுகாப்புணர்வோடு விசுவாச வாழ்க்கையில் பயணித்துக்கொண்டுருக்கிறவர்களே! இரட்ச்சிக்கப்பட்டவர்களே! (Saved).

நம்முடைய அருள்நாதர் இயேசுவைப்போல பரிசுத்தமான சிந்தையை தரித்துக்கொண்டு, பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொண்டு, தேவ நாம மகிமைக்கென்று வல்லமையாக வாழ முயற்சி செய்துகொண்டிருப்பவர்களே! இந்த உலகத்தின் இச்சைகளோடு அனுதினமும் பரிசுத்த ஆவியின் துணையோடு தொடர்ந்து போராடி மேற்கொள்ளுகிறவர்களே! (Conquerors)!

விடுமுறையில் சொந்த நாடு சென்று சொந்தங்களோடு உறவாடி மகிழ்ந்து, புளங்காகிதமடைந்து, புதுபொழிவோடு, புத்துணர்ச்சியோடு அலைன் CSI Tamil Parish நோக்கி வந்தவண்ணமிருப்பவர்களே, கர்த்தரை கனம்பண்ணுகிறவர்களே (Honorees of God)!

October 18 ல் வருடாந்திர அறுவடை ஸ்தோத்திரப் பண்டிகையை சிறப்பாக கொண்டாட ஆயத்தப்படுங்கள்!

கர்த்தர் உங்கள் குடும்பங்களை ஆசீர்வதிப்பாராக!

*Rev. M. Christopher Rajendran, Presbyter*

# திருமறை தியானப்பகுதி

## இதோ, நான் அவர்களுக்குச் சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி, அவர்களை குணமாக்கி,அவர்களுக்குப் பரிபூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன்!

## Behold, I will bring to it Health and Healing, and I will heal them and reveal to them abundance of prosperity and security.

Weeping Prophet Jeremiah மூலமாக கர்த்தர் யூதர்களுக்கு மிகக்கடுமையான தீர்க்கதரிசனங்களை அறிவிக்கிறார். பாபிலோனிலிருந்து உடனே தங்களுக்கு விடுதலை கொடுப்பார் என்று ஆவலோடு காத்துக்கொண்டிருந்தபொழுது, இன்னும் 70 ஆண்டுகள் பாபிலோன்ராஜாவின் கீழ் அடங்கியிருங்கள் என்று எரேமியா கர்த்தர் சொல்கிறார் என்று சொன்னபொழுது அக்கால மக்களுக்கு அது எரிச்சலை, கோபத்தை கிளறிவிடுவதாக இருந்தது. மக்களின் பாவங்களை கண்டிக்கிறார் (அதிகாரம் 2,7:18,31, 19:5; 32: 35).

யூதராஜாக்களும், அரசாங்கமும் கர்த்தரை மறந்து, அவரை விட்டு பின்வாங்கியதை கடுமையாக கண்டித்து பலமுறை பாடுகளையும், சிறைவாசத்தையும் கண்ணீரோடு அனுபவித்தார். இவரது செய்தியின் மையக்கரு யூதாவின் நியாயத்தீர்ப்பும் (அதிகாரம் 1-29), வருங்கால மெசியா அரசும் (அதி 23:3-8,30-33) ஆகும்.மனந்திரும்பி வரும் மக்களுக்கான தேவ பாதுகாப்பையும், ஆசீர்வாதங்களையும் வெளிப்படுத்தினார்.

இந்தப் பகுதியில் தான் கடுமையாக உச்சந்தலைமுதல் உள்ளங்கால் வரை புண்களால் பாதிக்கப்பட்ட சரீரத்தில், ஒரு மருத்துவர் எவ்வாறு காயங்களை டிங்க்சரால் தொட்டு சுத்தம் செய்து,

மருந்திடும்பொழுது எவ்வளவு வேதனை ஏற்படுமோ அந்தளவு வேதனையை இஸ்ரவேல் ஜனங்கள் அனுபவித்துக்கொண்டிருந்தார்கள். (People of God were in disease from head to foot, and no soundness in them, because of their sinful nature. They could not heal themselves. All their doings have been evil. They were in desperate need of great Physician for complete healing to attain good health). அவர்கள் தங்களைத்தாங்களே குணமாக்கிக்கொள்ள முடியாத நிலையில் உள்ளதால் தங்களுக்கு ஒரு இரட்சகர் வேண்டும் என்ற பரிதாபமான நிலையிலிருந்தார்கள்.

அந்த சமயத்தில்தான் சிறைபிடிக்கப்பட்டு சிறைச்சாலையிலிருந்த எரேமியாவைத் தன்னை நோக்கி கூப்பிடச்சொல்கிறார். நான் உனக்கு உத்தரவுகொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உன் மூலமாக இந்த மெசியாவைக்குறித்த தீர்க்கதரிசனத்தை வெளிப்படுத்துவேன். ஏன் என் ஜனமும், அவர்களது ராஜாக்களும், எருசலேம் நகரமும் கைவிடப்பட்டது? எதிரிகளால் சூழப்பட்டு சூறையாடப்பட்டது? அந்த நகரத்தினுடைய மக்களின் பாவங்களினிமித்தம்! நான் என் முகத்தை அவர்களுக்கு மறைத்தேன், என் கோபமும், என் உக்கிரமும் அவர்கள்மேல் ஊற்றப்பட்டபடியால் எதிரிகள் அவர்களை மேற்கொண்டு வெட்டி நகரம் அவர்களுடைய பிணங்களால் நிறைந்து, உச்சந்தலைமுதல் உள்ளங்கால் வரை காயம்பட்ட மீதியான என்ற ஜனம் நெருக்கப்படுவதால், நானும் நெருக்கப்பட்டு, மனவுருக்கத்தோடு நான் அவர்களுக்கு சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி, அவர்களை குணமாக்குவேன் என்று கர்த்தர் சொல்கிறார். (The miserable disturbed state of a Holy nation being compared to wounded and sick man as in Good Samaritan Parable).

காயப்பட்ட, நோய்வாய்ப்பட்ட (பாவம் என்னும் நோயினால்), தேசத்தை சீர்படுத்துதலின் தேவனுடைய செயல் தான் Health and Healing. எவ்வளவு பெரிய இழப்பாக, கடினமான ,கசப்பான அனுபவங்களாக இருந்தாலும்கூட தேவன் அவர்களை முற்றிலுமாக கைவிடாமல்,அவர்களுக்கு ஒரு நம்பிக்கையூட்டி,உயிர்ப்பிக்கின்ற வாக்குத்தத்தம் தான் இந்த வாக்குத்தத்தம்! (I will bring a renewal, or restoration, and a Healing and Health).

This passage is Messianic, as proved by the forgiveness of sins promised in vs 8. and in verses 7,9 the restoration and glorification before the all the nations of the Earth.

So, Christ is the great Physician and Supernatural Doctor! His Blood is the balm in Gilead and medicine which being applied to those that are diseased with Sin, and to Sin Sick Souls. His Blood makes an effectual cure of them and offered them forgiveness and Health of Eternal life. (John 10:10).

***இயேசு கிறிஸ்து ஒரு தலைசிறந்த மருத்துவர்! பாவம் என்ற கடுமையான கொள்ளைநோயினால் பாதிக்கப்பட்ட மனுக்குலத்தை நோயின் பாதிப்பிலிருந்து விடுவிப்பதோடு மாத்திரமல்ல! பாவமன்னிப்பையும், பரிபூரண ஆரோக்கியத்தையும், சௌக்கியத்தையும், குணமாக்குதலையும், பரிபூரண சமாதானத்தையும், ஆனந்தமயமான நித்தியஜீவனையும் கல்வாரிச்சிலுவையில் பலியாகி கொடுத்திருக்கிறார்!***

**So, Lord Jesus Christ is the Supernatural and life-giving Doctor!**

**நம்முடைய எல்லாவிதமான நோய்களுக்கும் இயேசுவையே விசுவாசத்தோடு நோக்கி கூப்பிடுங்கள்.**

***அன்புடன்... உங்கள் ஆயர்,***
**Rev. M. Christopher Rajendran**




கிறிஸ்துவுக்குள் அன்பான உடன் விசுவாசிகளே...
கர்த்தர் உங்கள் வாழ்க்கையிலே செய்த அற்புதங்களை நீங்கள் சாட்சியாக தெரியப்படுத்த விரும்பினால்; நீங்கள் அதை எழுதி அனுப்புங்கள். கர்த்தருடைய நாம மகிமைக்காய் அது வெளியிடப்படும்.



# செயலரிடமிருந்து...

பிரியமானவர்களே...

இயேசு கிறிஸ்துவின் இணையில்லா நாமத்தினாலே உங்கள் யாவருக்கும் சபை குழுவின் சார்பாக அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். புதிய பெலத்தோடு புதிய மாதத்தில் அடியெடுத்து வைத்துள்ள திருச்சபை மக்களாகிய உங்களை இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.

இந்த ஆண்டின் எட்டு மாதங்களை கடந்துவர கர்த்தர் நமக்கு உதவி செய்து நம் குடும்பத்தையும் பாதுகாத்து வழிநடத்தி நம் கையின் பிரயாசங்களை ஆசிர்வதித்த தேவாதி தேவனை நன்றி நிறைந்த உள்ளதோடு போற்றுவோம். திருச்சபை மக்கள் பலர் தங்கள் விடுமுறை நாட்களில் தங்கள் அன்பான பெற்றோர், குடும்பத்தார் மற்றும் நண்பர்களை கண்டு; சந்தோஷமாய் விடுமுறை நாட்களை கழிக்க கர்த்தர் கிருபை கூர்ந்தார். மறுபடியும் இந்த தேசத்திலே திரும்பி வரவும், தேவன் நமக்கு தந்த பணியினை புதிய பெலத்தோடு தொடர்ந்து செய்யவும் கிருபையளித்த தேவனை முழுமனதாய் போற்றுவோம்.

ஒவ்வொரு ஓய்வு நாள் ஆராதனையிலும் கர்த்தர் புதிய, புதிய ஆத்துமாக்களை பங்குகொள்ளச்செய்ததற்காக கர்த்தரை ஸ்தோத்தரிப்போம். வருகிற அக்டோபர் 18ல் நடைபெறவுள்ள வருடாந்திர அறுவடை ஸ்தோத்திர பண்டிகையை கொண்டாட ஒவ்வொருவரும் ஆயத்தமாவோம்.

திருச்சபையின் அனைத்து ஊழியங்களில் உற்சாகத்தோடு பங்குபெறுங்கள். உங்களது அனுதின ஜெபம் மாதாந்திர பொருளுதவி, ஊழியத்தின் கரிசனைக்காக தேவனை துதிக்கிறேன். கர்த்தர் மென்மேலும் உங்களையும், உங்கள் குடும்பத்தார் அனைவரரையும் ஆசீர்வதிப்பாராக.

தேவ கிருபை உங்கள் அனைவரோடும் எப்போதும் இருப்பதாக..

இப்படிக்கு ...
அன்புடன் கிறிஸ்துவின் பணியில்
S. சுரேஷ் ராஜன்

# வேதாகமம் எழுதியவர்கள்

| ஸ்தகம் | எழுதியவர் | ஆண்டு |
|---|---|---|
| ஆதியாகமம் | மோசே | 1446–1406 |
| யாத்திராகமம் | மோசே | 1446–1406 |
| லேவியராகமம் | மோசே | 1446–1406 |
| எண்ணாகமம் | மோசே | 1446–1406 |
| உபாகமம் | மோசே | 1446–1406 |
| யோசுவா | யோசுவா or சாமுவேல் | 1400–1000 |
| நியாயாதிபதிகள் | சாமுவேல் | 1050–1000 |
| ரூத் | | 1050–1004 |
| 1 சாமுவேல் | சாமுவேல் | 1050– 970 |
| 2 சாமுவேல் | சாமுவேல் | 1050– 970 |
| 1 இராஜாக்கள் | எரேமியா | 587– 539 |
| 2 இராஜாக்கள் | எரேமியா | 587– 539 |
| 1 நாளாகமம் | எஸ்றா | 450– 400 |
| 2 நாளாகமம் | எஸ்றா | 450– 400 |
| எஸ்றா | எஸ்றா | 440 |
| நெகேமியா | எஸ்றா | 440 |
| எஸ்தர் | மொர்தெகாய் | 486–464 |
| யோபு | | |
| சங்கீதம் | | |
| நீதிமொழிகள் | | 971–931 |
| பிரசங்கி | சாலமோன் | 971–931 |
| உன்னதப்பாட்டு | சாலமோன் | 971–931 |
| ஏசாயா | ஏசாயா | |
| எரேமியா | பாருக் . எரேமியா | 587–605 |
| புலம்பல் | எரேமியா | 586–578 |
| எசேக்கியல் | எசேக்கியல் | 593–581 |
| தானியேல் | தானியேல் | 605–636 |
| ஓசியா | | 835–500 |
| யோவேல் | | 400–350 |
| ஆமோஸ் | ஆமோஸ் | 786–746 |
| ஒபதியா | | 586 |
| யோனா | | 400 |
| மீகா | | 735–700 |
| நாகூம் | | 626–612 |
| ஆபகூக் | | 605–598 |
| செப்பனியா | | 640–609 |
| ஆகாய் | | 520–515 |
| சகரியா | சகரியா –1. 2. 3 | 520–518 |
| மல்கியா | | 400 |


வேதாகம களஞ்சியம்

வேதாகமம் சுமார் 40 நபர்களால் எழுதப்பட்டது

இவர்கள் உலகின் பல பகுதிகளில் பிறந்தவர்கள்.

இதில் பலர் மற்றவர்களை பார்த்ததோ, அவர்களை பற்றி கேள்விப்பட்டதோ கிடையாது. பலர் மற்றவர்கள் எழுதினதை படித்தது கூட கிடையாது.

# மிஷனரி சுயசரிதை / Missionary Biography



## வில்லியம் கேரி
## WILLIAM CAREY
## (1761-1834)

**பிறப்பு**
*ஆகஸ்ட் 17, 1761*
பவுலேர்ஸ்புரி, இங்கிலாந்து

**இறப்பு**
*ஜூன் 9, 1834,*
செராம்பூர், இந்தியா

வில்லியம் கேரி (William Carey) (ஆகஸ்ட் 17, 1761 – ஜூன் 9, 1834) ஆங்கில புரட்டஸ்தாந்து, பப்திஸ்த சபையின் மிஷனரியாக இந்தியாவில் ஊழியம் செய்தவர். இவர் விவிலியத்தை பெங்காலி, சமஸ்கிருதம் மற்றும் பல இந்திய மொழிகளில் மொழிபெயர்த்தவர்.

**வாழ்க்கைக் குறிப்பு:**

வில்லியம் கேரி இங்கிலாந்து, நார்த்தாம்டன்ஷயரில் பவுலஸ்புரி என்ற கிராமத்தில் எட்மண்ட், எலிசபெத் கேரி ஆகியோரின் ஐந்து பிள்ளைகளில் மூத்தவராகப் பிறந்தார். தந்தை எட்மண்ட் நெசவுத் தொழிலைச் செய்து வந்தார். வில்லியம் ஆறு வயதாக இருக்கும் போது தந்தை அக்கிராமத்தின் பாடசாலை தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். சிறுவனாக இருந்தபோதே, வில்லியமுக்கு சுற்றுச்சூழல் மீது அதிக ஆவல் இருந்தது. செடிகள், பூச்சிகள் மற்றும் சிறு விலங்குகளை சேகரிப்பதில் ஆர்வம் காட்டினார். மிகவும் இள வயதிலேயே இலத்தீன், கிரேக்க மொழிகளை தானே கற்றுக்கொள்ளும் ஆற்றலை பெற்றிருந்தார்.

தமது தந்தையின் விருப்பத்தின்படி, பதினான்காவது வயதில் அருகே உள்ள ஹெக்கில்டன் என்னும் கிராமத்தில் செருப்புத்தைக்கும் தொழிலாளியின் கீழ் மாணவராகச் சேர்ந்தார். இவரது எஜமானன் கிளார்க் நிக்கோலஸ் அவரைப்போலவே ஆலயம் செல்லுபவராகவே காணப்பட்டார். அவரது சக மாணவராக இருந்த ஜோன் வார் என்பவர் கடமைக்காக மாத்திரம் ஆலயம் செல்வதை வெறுப்பவர். அவரிடமிருந்து இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பைக் குறித்து அறிந்து, தன் வாழ்வைக் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தார். இங்கிலாந்து திருச்சபையில் இருந்து விலகிய கேரி ஹெக்கில்டன்னில் ஒரு சிறிய குழு கூடுகை (Congregational) திருச்சபையை ஆரம்பித்தார். நிக்கோலஸ் கேரிக்கு, தனது கிராமத்தில் கல்லூரி சென்று பயின்ற ஒருவர் மூலம் கிரேக்கம்

கற்றுக்கொடுத்தார். 1779ல் நிக்கோலஸ் இறந்த பிறகு, தாமஸ் ஓல்ட் என்ற உள்ளூர் செருப்புத் தைக்கும் தொழிளாளியிடம் வேலைக்குச் சேர்ந்தார்.

**இந்தியா வருகை:**
1781 ஜூன் 10 இல் டொலி என்பாரைத் திருமணம் செய்தார். பப்திஸ்த சபை பாப்டிஸ்டு மிஷனெரி இயக்கத்தின் ஒரு சிறப்புக் கூட்டத்தில் ஒரு மிஷனெரி, இந்தியாவின் கிறிஸ்தவ மத தேவைகளைக் குறித்துப் பகிர்ந்து கொண்டார். அப்பொழுது வில்லியம் கேரி, அந்தப் பேச்சின் மூலம் சவாலைப் பெற்றவராய், இந்தியாவிற்கு மிஷனெரியாகச் செல்லும்படியாகத் தன்னை அர்ப்பணித்தார். வில்லியம் கேரி, குடும்பத்துடன் 1793 நவம்பர் 9 கல்கத்தா வந்து சேர்ந்தார். அங்கு மிகவும் கடினமான சூழ்நிலையில் ராம் பாஷூ என்னும் ஒரு பெங்காலிக் கிறிஸ்தவர் இவருக்கு தனது மொழியைக் கற்றுத்தர முன் வந்தார்.

கேரி தன் பொருளாதாரத் தேவைகளை சந்திக்கும்பொருட்டு தாவரவியல் பூங்கா ஒன்றின் மேலாளராகவும், மை தயாரிக்கும் தொழிற்சாலையின் மேலாளராகவும் மற்றும் மொழியியல் துறையின் பேராசிரியராகவும் பணியாற்றினார். அப்பொழுது வேதாகமத்தை மொழிபெயர்க்க ஆரம்பித்தார். அந்தக் காலக்கட்டத்தில் தன்னுடைய அருமைப் பிள்ளைகளையும், தன் மனைவியையும் இழந்தார். இந்த சமயத்தில் செராம்பூரில் ஒரு இளம் மிஷனெரிக்குழுவுடன் இணைந்து வேதாகமத்தைப் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்த்தனர். ஆனால் அவர்களுடைய அனைத்துக் கையெழுத்துப் பிரதிகளும் நெருப்புக்கு இரையானது. ஆனாலும் அவர்கள் ஒரு புதிய உத்வேகத்துடன் தங்கள் பணியைத் தொடர்ந்து வேத நூலை பல மொழிகளில் மொழிபெயர்த்தனர். இன்றைய மிஷனரி இயக்கங்களின் தந்தை, இயேசு கிறிஸ்துவின் இராஜ்யத்தை விரிவடைய செய்வதே என் முதன்மை பணி என்றும் வாழ்ந்தவர்

**கடவுளிடம் இருந்து பெரிய காரிங்களை எதிர்பார்**
**கடவுளுக்காக பெரிய காரிங்களை சாதிக்கப்பார் என்றார்.**

41 ஆண்டுகள் அவர் கடுமையாக இந்தியாவிலே உழைத்தார். புதிய ஏற்பாடு வங்க மொழியில் 1800 ஆம் ஆண்டு இவரால் மொழிபெயர்க்கப்பட்டது, தன் மரணத்துக்கு முன்பாக 40 க்கு மேற்பட்ட மொழிகளில் புதிய ஏற்படும், 20க்கு மேலான மொழிகளில் முழு வேதகமத்தையும் மொழிபெயர்த்தார். உடன்கட்டை ஏறுதல் என்னும் பழக்கத்தை எதிர்த்து, ஒரு சட்டத்தை இயற்றி அதற்கு தடை விதிக்க பாடுபட்டார்.

இந்திய அருட்பணியின் தந்தை வில்லியம் கேரி 1834 ஜூன் 9'ல் மறைந்தார்.

**சோம்பேறிக்கு, வேதாகமத்தின் எந்த ஒரு வசனமும் தன்னுடைய அர்த்தத்தை வெளிப்படுத்துகிறதில்லை!**

# ”பிசாசுக்கு எதிர்த்து நிற்போம்”

**தேவனுக்கு** கீழ்படிந்திருப்போம்: **“தேவனுக்கு கீழ்படிந்திருங்கள்: பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்.” யாக்கோபு 4:7.**

நாம் தேவனுக்கு கீழ்படியாத வரை பிசாசானவன் நம்மை விட்டுப் போக மாட்டான். ஆதாமும் ஏவாளும் தேவனுக்கு கீழ்படியாமல் பிசாசுக்கு கீழ்ப் படிந்ததினால் தேவன் தங்களுக்காக வைத்திருந்த மேலான ஆசீர்வாதங்களை இழந்து போனார்கள். பார்வோன் மோசேயைப் பார்த்து, உன் ஜனங்களோடு எகிப்திலே உங்கள் தேவனை ஆராதித்துக் கொள்ளுங்கள் என்று சொன்னான். அதாவது என் (பார்வோனின்) ஆழுகைக்குள் இருந்து கொண்டு உங்கள் தேவனை ஆராதித்துக் கொள்ளுங்கள் என்று சொன்னான். மோசேயோ, அவனுக்கு கீழ்படி யாமல் தேவனுக்கு கீழ்படிந்ததானால் இஸ்ரவேல் ஜனங்கள் கானானுக்கள் பிரவே சித்தார்கள்.

இன்றைக்கும் தேவனை ஆராதிக்கும் நாம், நம் வாழ்வில் அனேக காரியங்களில், அனேக வேளைகளில் அவருக்குக் கீழ்படியாததால் சாத்தானின் ஆழுகைக்குள்ளாகி அவனின் அடிமைகளாகவே இருக்கின்றோம். உலகத்தில் நம்முடைய போராட்டம் மாம்சத்தோடும். இரத்தத்தோடும் அல்ல, அந்தகார லோகாதி பதிகளோடும், வான மண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகளோடும், எவனை விழுங்கலாம் என்று சற்றித் திரிகிற பிசாசின் சேனைகளோடுமே என்று வேதம் நமக்கு கற்றுத்தருகிறது. கிறிஸ்துவையே சோதிக்கத் துணிந்த சாத்தான் நம்மை எளிதில் மேற்கொள்ள எத்தனிப்பது அதிக நிச்சயமல்லவா?. கிறிஸ்துவானவர் தேவனுக்கு கீழ்ப்படிந்து அவருடைய வார்த்தையில் உறுதியாயிருந்து சத்துரு வானவனை மெற்கொண்டது போல நாமும் தேவனுக்கு கீழப்படிந்து அவருடைய வார்த்தையில் உறுதியாயிருந்து அவனை மேற்கொள்ள முயல்வோமா?.

**இரண்டாவதாக,** விசுவாசத்தில் உறுதியாயிருப்போம் 1பேதுரு 5:9ல் ***“விசுவாசத்தில் உறுதியாயிருந்து அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்”*** என்று வாசிக்கிறோம். விசுவாசம் என்ற வரத்தை ஆவியானவர் தருகிறார்.

செங்கடலுக்கு முன்பாக நின்ற இஸ்ரவேல் ஜனங்கள் அவிசுவாசமுள்ள வார்தைகளைப் பேசினார்கள், ஆனால் மோசே, இன்றைக்கு தேவன் உங்களுக்கு செய்யும் இரட்சிப்பை பாருங்கள் என்று விசுவாச வார்த்தைகளைப் பேசினான். உடனே தேவன் வழியை உண்டாக்கினார். சங் 106: 12 சொல்லுகிறது *“அவர்கள் அவரு டைய வார்த்தைகளை விசுவாசித்து அவருடைய துதியைப் பாடினார்கள்”* என்று. இப்படியாக அனேக காரியங்களை நாம் வேதத்தில் காணலாம். எனவே எந்த பிரச்சனைக்கு எதிராகவும் அவிசுவாச வார்த்தைகளை பேசாதிருப்போம். ஒரு வேளை நாம் அவிசுவாச வார்த்தைகளைப் பேசிக் கொண்டிருப் போமானால் நம்முடைய அவிசுவாசத்தின்படியே நமக்கு ஆகக்கூடும். ஆகவே இந்த கடைசி காலத்தில் தேவனுக்கு எல்லாவற்றிலும் கீழப்படிவோம், ஆவியானவரின் பலத்தைப் பெற்றுக் கோள்ளுவோம், சத்துருவானவனுக்கு எதிர்த்து நிற்போம் அவன் நம்மை விட்டு தூரமாய் ஓடுவான்.

**“பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக.”**
**(ரோமர் 15:13)**

**M. Nesamony.**

**பெரிய நதிக்கு பதிலாக,**
**இன்றைக்கு இருந்து நாளை வற்றிப்போகும் நீரோடையையே அடிக்கடி தேவன் நம்முடைய வாழ்க்கையில் தருகிறார்.**
**ஏன்?**
**நாம் ஆசீர்வாதத்தின் மேல் சாய்ந்துக்கொள்ளுவதற்குப் பதிலாக,**
**ஆசீர்வதிப்பவரின் மேல் சாய்ந்துக்கொள்ளுவதற்காக!**

# ஆத்தும ஆதாயம் செய்த சிறுமி



ஒரு சிறுமி தன் தகப்பனிடம் "அப்பா, நான் இயேசுவை நேசிக்கிறேன்" என்று சொன்னாள். நீ ஒரு நாளும் பார்த்திராத இயேசுவை எப்படி நேசிக்க கூடும்? என்று கேட்டார். அதற்க்கு சிறுமி "அப்பா, நான் ஆறு மாத குழந்தையாக இருந்த போது அம்மா இறந்து விட்டபடியினால் அம்மாவைப் பற்றியும் அவர்களின் அன்பைப் பற்றியும் அறிந்திருக்க முடியாது. ஆனாலும் உங்களைப் போல அம்மாவையும் நேசிக்கிறேன்" அதெப்படி நீ பார்த்திராத உன் அம்மாவை நீ எப்படி நேசிக்க கூடும் என்று கேட்டார்.

அதற்கு அவள், "நீங்கள் அம்மாவைப் பற்றியும் அவர்கள் இயேசு சுவாமியை நேசித்ததாகவும் இயேசுவோடு இருப்பதாகவும் எனக்கு அடிக்கடி கூறியிருக்கிறீர்கள். அம்மா நேசிக்கும் இயேசுவை நீங்கள் நேகிக்கிறீர்களா?நானும் அம்மாவும் இயேசுவோடு ஒரநாள் இருப்போமே'. உங்களுக்கு எங்களோடு இருக்க ஆசையில்லையா அப்பா? ஏன்று கேட்டாள்.

சிறுமியின் இந்த கேள்வி உண்மையிலேயே தகப்பனின் உள்ளத்தில் தைத்தது. வெறும் பெயர் கிறிஸ்தவனான அவர் உடன் பதில் சொல்ல முடியாது திகைத்தார். கண்களில் கண்ணீர் வழிந்தது. உள்ளம் குத்துண்டார். இரடசிப்பென்னும் பேரின்ப சுகம் பெற்றார்.

"ஆம் கிறிஸ்துவில் அன்பானவர்களே இந்த சிறுமி இவள் அப்பாவிற்க்கு இயேசுவைக் காண்பித்தது போல நாமும் இந்த இயேசுவை பற்றி மற்றவர்களுக்கு அறிவிக்க கடமைப்பட்டுள்ளோம். இதற்காகவே அவர் நம்மை தெரிந்தெடுத்திருக்கிறார்.

"அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போல'.. சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்." (தானி 12:3)

- **நெல்சன் சோபித ராஜ்**









**Charles Blondin** was a fascinating man. The story of his pushing a wheelbarrow across Niagara Falls is one in which kids as well as adults can identify the difference between mere belief and the true faith.

Can you imagine a tightrope stretched over a quarter of a mile and spanning the breadth of Niagara Falls? The thundering sound of the pounding water drowning out all other sounds as you watch a man step onto the rope and walk across!

This stunning foot made Charles Blondin famous in the summer of 1859. He walked 160 feet above the falls several times back and forth between Canada and the United States as huge crowds on both sides looked on with shock and awe. Once he crossed in a

sack, once on stilts, another time on a bicycle, and once he even carried a stove and cooked an omelet!

On July 15, Blondin walked backward across the tightrope to Canada and returned pushing a wheelbarrow. He slowly reached the tower. Everyone on the ground watching clapped, whistled and heaved a sigh of relief. As he came down, they shook his hands and took selfies.

The Blondin story is told that it was after pushing a wheelbarrow across while blindfolded that Blondin asked for some audience participation. The crowds had watched and "Ooooohed" and "Aaaaaahed"! He had proven that he could do it; of that; there was no doubt. But now he was asking a volunteer to get into the wheelbarrow and take a ride across the Falls with him!

It is said that he asked his audience, "Do you believe I can carry a person across in this wheelbarrow?" Of course, the crowd shouted that yes, they believed!

It was then that Blondin raised the question- "Who will get in the wheelbarrow?"  Of course, none did. There was stunned silence.

## A Picture of Faith:

This story paints a real-life picture of what faith actually is. The crowd had watched his daring feats. They said they believed, but their actions proved they truly didn't.

Abraham is known as a man of Faith who faithfully followed the Lord's leading. God gave Abraham the promise that the Redeemer would come through his family. Abraham and his wife Sarah were past child-bearing age when God gave them a child named Isaac.

God asked Abraham to sacrifice his only son Isaac in Genesis :22. God told Abraham to take Isaac to a mountain to sacrifice him to the Lord. God never intended for Abraham to kill Isaac. This was merely a test to show to us the type of Faith Abraham had.  Bible says, **"When Mary arrived and saw Jesus, she fell at his feet and said, 'Lord, if only you had been here, my brother would not have died" -John 11:32**

The similarities in the two sisters' Mary and Martha's reaction shows us an important truth. Mary trusted Jesus enough to know He could have kept Lazarus from dying, but did she trust that the unanswered prayer was part of Jesus' plan all along? Mary moved to a deeper trust in her Savior through hardship.

Don't raise questions like, "Why would God allow something so terrible to happen?" take over our thoughts. God ways are not our ways.

Solomon, the famous king who wrote proverbs, knew that trust is exactly where we must start: Trust in the LORD with all your heart and lean not on your own understanding. – Proverb 3:5

Belief & Trust are different. For Trust one needs total surrender. Most of us believe in God. But we don't trust him.

God will give us strength to endure our painful circumstances. Something suffering is a part of God's plan to bring about a greater good. When God is all you have, God is enough. He can be trusted! It's one thing for us to say we believe in God. It's true faith though when we believe God and put our faith and trust in His Son, Jesus Christ.

**Ms.S.Divya Sherrin**

**மனிதனில் வாழும் பாவத்தை**
வேர் அறுக்க முதல்முறை இயேசு வந்தார்...

**பாவத்தில் வாழும் மனிதரை**
வேர் அறுக்க இரண்டாம்முறை இயேசு
வரப்போகிறார்...



உங்கள் வாழ்க்கையின் எல்லாப்
போராட்டங்களையும் முழங்காலில் சந்தியுங்கள்...
ஒவ்வொரு முறையும் வெற்றிபெறுவீர்கள்...!






When God puts you in the ground, He doesn't bury you, but plants you...

When God puts you in the fire, He doesn't burn you, but refines you...

When God puts you in the water, He doesn't drown you, but cleanses you...

Joseph found himself in a pit but God was planting him to be a prime minister...

The three Hebrew boys found themselves in a fire, but God was refining them to be governors...

Naaman found himself in a water, but God was cleansing him to be a complete leader...

Wherever you are... is not by accident, but by a miracle...

God has designed your life already, in whatever state you find yourself, know that it's part of God's design.

Don't ever give up! God cares. God loves you!

-Joshika Vashini

# பாடல் பிறந்த கதை




1. இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன் (3)
பின் நோக்கேன் நான் (2)
2. சிலுவை என் முன்னே, உலகம் என் பின்னே (3)
பின் நோக்கேன் நான் (2)
3. கர்த்தர் என் மித்ரு சாத்தான் என் சத்ரு (3)
பின் நோக்கேன் நான் (2)
4. யேசு என் நேசர் மாம்சம் என் தோஷம் (3)
பின் நோக்கேன் நான் (2)
5. யாரில்லையெனினும் பின் தொடர்வேனே (3)
பின்னோக்கேன் நான் (2)

150 ஆண்டுகளுக்கு முன்னர், இங்கிலாந்தின் வேல்ஸ் பகுதியில் மிகப்பெரும் எழுப்புதல் உண்டாயிற்று. அதன் விளைவாக இங்கிலாந்திலிருந்தும், ஜெர்மனியிலிருந்தும் பல மிஷனெரிகள் வட–கிழக்கு இந்தியாவிற்கு நற்செய்தி அறிவிக்க வந்தார்கள். அந்நாட்களில், வட–கிழக்கு இந்தியா இந்நாட்களில் உள்ளது போல பல மாநிலங்களாக பிரிக்கப்பட்டிருக்க வில்லை. நூற்றுக்கணக்கான மலைவாழ் பழங்குடி இனத்தவர்களை உள்ளடக்கிய அப்பகுதி, அஸ்ஸாம் என்று அழைக்கப்பட்டது.

அதில் நாகா என்ற ஒரு பழங்குடி இனம் இருந்தது. அவர்கள் ஆதிவாசிகளாயிருந்தார்கள். மிகவும் கொடூரமானவர்களாகவும்

இருந்தார்கள். அவர்களின் சமுதாய வழக்கப்படி அந்த இனத்தில் உள்ள ஆண்கள் தங்கள் வாழ் நாளில் எத்தனை மனிதத் தலைகளை (உயிரோடு உள்ளவர்களின் தலைகளை) வெட்டி சேகரிக்க முடியுமோ, அத்தனையையும் சேகரிக்க வேண்டும். அதனால் அவர்கள் தலை வெட்டுபவர்கள் என்றும் அழைக்கப்பட்டார்கள். ஒரு மனிதன் தனது மனைவியை பாதுகாக்கும் அவனது வலிமையும் பெலமும், அவன் இதுவரை எத்தனை தலைகளை வெட்டி சேகரித்து வைத்துள்ளான் என்பதை வைத்து அளவிடுவார்கள். ஆகவே திருமண வயதில் இருக்கும் ஒரு வாலிபன் தன்னால் இயன்ற அளவு மனித தலைகளை வெட்டி தன்னுடைய வீட்டின் சுவரிலே மாட்டி வைத்திருப்பான்.

இந்த கொடூரமான ஆதிவாசிகளின் மத்தியில், இயேசு கிறிஸ்துவின் அன்பையும், சமாதானத்தையும், விசுவாசத்தையும் அறிவிக்க வேல்ஸ் மிஷனெரிகள் வந்தார்கள். எதிர்பார்த்தது போல அவர்கள் வரவேற்க்கப்படவில்லை.

ஒரு வேல்ஸ் மிஷனெரி வெற்றிகரமாக ஒரு நாகா ஆதிவாசி மனிதனையும், அவனது மனைவியையும், இரு பிள்ளைகளையும் கிறிஸ்துவண்டை நடத்தினார். இந்த மனிதனின் அசைக்க முடியா விசுவாசம் அந்த கிராமத்தில் இருந்த மற்றவர்களும் இயேசுவை ஏற்றுக்கொள்ள வைத்தது. இதனால் கடும் கோபமடைந்த கிராமத்தலைவன், அந்த முழு கிராமத்தையும் ஒன்று கூட்டினான். அந்த பிறகு, முதலாவதாக இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட அந்த குடும்பத்தை முன்னால் அழைத்து, எல்லாருக்கும் முன்பாக உன் விசுவாசத்தை நீ மறுதலிக்க வேண்டும் அல்லது நீ மரணத்தை சந்திக்க வேண்டும் என்று சொன்னான்.

பரிசுத்த ஆவியானவரால் உந்தப்பட்டவனாய், அந்த மனிதன் உடனடியாக ஒரு பாடலை பாடினான். அவன் பாடினான்:

இயேசுவின் பின்னே போகத்துணிந்தேன்
பின்னோக்கேன் நான், பின்னோக்கேன் நான்....

இதனால் கடும் கோபமடைந்த கிராமத்தலைவன், தன்னுடைய வீரர்களிடம், அவனது இரு பிள்ளைகளையும் அம்பெய்து கொல்லும்படி சொன்னான். இரு பிள்ளைகளும் தரையில் விழுந்து துடித்துக்கொண்டிருக்கையில் கிராமத்தலைவன் சொன்னான், “இப்பொழுதாவது உன்னுடைய விசுவாசத்தை மறுதலிப்பாயா?

உன்னுடைய இரு மகன்களையும் இழந்துவிட்டாய், உன் மனைவியையும் இழக்கப்போகிறாய்” என்றான். ஆனால் அந்த மனிதனோ பின்வரும் இரு வரிகளை அதற்கு பதிலாகப் பாடினான்:

யாரில்லையெனினும் பின் தொடர்வேனே
பின்னோக்கேன் நான் பின்னோக்கேன் நான்...

இதனால் மிகவும் கோபமடைந்த அந்த கிராமத்தலைவன், அவனது மனைவியை கொல்லும்படி உத்தரவிட்டான், அவளும் கொல்லப்பட்டாள். இப்பொழுது அந்த கிராமத்தலைவன் சொன்னான், உனக்கு இறுதி வாய்ப்புத் தருகிறேன். விசுவாசத்தை மறுதலித்து உயிர்வாழ் என்றான். மரணத்தை எதிர்கொண்டிருக்கும் அந்த மனிதன், நம் மனதைவிட்டு நீங்கா இந்த இறுதி வரிகளைப் பாடினான்.

சிலுவை என் முன்னே, உலகம் என் பின்னே
பின்னோக்கேன் நான் பின்னோக்கேன் நான்...

அவனது பிள்ளைகள் மற்றும் மனைவியைப்போலவே அவனும் கொல்லப்பட்டான். ஆனால் அவனது அந்த அசாதாரணமான மரணம் ஒரு மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. 2000 ஆண்டுகளுக்கு முன்னர் வெகு தொலைவில் வாழ்ந்த ஒரு மனிதனுக்காக ஏன், இந்த மனிதனும், அவனது மனைவியும், பிள்ளைகளும் தங்கள் உயிரை இழக்க வேண்டும்? என்று அந்த கிராமத்தலைவன் வியந்தான்! இந்த குடும்பத்திற்கு பின்னால் ஏதோ ஒரு இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று உண்டு, எனக்கு அந்த சக்தி வேண்டும் என்று சொல்லி, உடனடியாக, “நானும் இயேசுவுக்கு சொந்தமானவன்!” என்று அறிக்கையிட்டான். இந்த வார்த்தைகளை அந்த கூட்டம் தங்கள் தலைவனின் வாயிலிருந்து கேட்ட உடனே, அந்த முழு கிராமமும் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டது.

இதுதான் நம் தேவனின் மாபெரும் வல்லமை என்பது!

சங்கீதம் 126:6 அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன்
அழுதுகொண்டு போகிறான்; ஆனாலும் தான் அறுத்த அரிகளைச்
சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பிவருவான்.

அந்த நாகா இனம்தான் இன்றைய நாகலாந்து!
இந்தியாவின் ஒரே முழு கிறிஸ்தவ மாநிலம்!
















**For more details...**




**Mr. Melbin Paul**

**056 44 11 22 5**

# சிறுவர் பகுதி / Children's Corner


## Cartoon of the Month

**ONE WAY** A Joyful 'toon by Mike Waters




Jesus answered, "I am the way and the truth and the life. No one comes to the Father except through me." — John 14:6 NIV

## Parents... narrate the story to ur kid...



# June'19 Children's Quiz (Primary & Above)

**FROM THE BOOK OF PROVERBS CHAPTER 26-31**
**(Referred from NIV BIBLE)**

1) As a dog turns to its vomit, so a ______ repeats to his folly.
   a) Sluggard b) fool c) short tempered

2) As water reflects a face, so a man's _______ reflects the man.
   a) heart b) help c) kindness

3) Wicked man ruling over helpless people is compared to?
   a) Roaring lion b) strength less elephant c) cunning fox

4) A man's ________ will bring him low.
   a) laziness b) anger c) pride

5) What imparts wisdom to a child?
   a) A rod of correction b) educating them c) giving independence

## COMPLETE THE VERSE:

6) "A _________ tongue hates those it hurts, and a _________ mouth works ruin"

7) "_______ from a friend can be trusted, but an ________ multiplies kisses."

8) "Whoever flatters his ________ is spreading a ______ for his feet"

9) "Every ______ of God is ________, he is a shield to those who take ________ in him"

10) What is deceptive and fleeting?

**Last Month Children's Quiz Correct Answers:**
**Jul Aug- 2019**

**From the Book of Prov 16 to 25**

1-(b) Hearts, steps (16:9)

2-(a) Bribe (17:8)

3-(c) Words of the mouth (18:4)

4-(b) Sleep (20:13)

5-(a) Answering before listening (18:13)

6-Advice, discipline (19:20)

7-Horse, battle, victory (21:31)

8-Evil, schemer (24:8)

9-Broken tooth, lame foot, trouble (25:19)

10-Hot tempered person (22:24)

11- Starting a quarrel (17:14) lose the relationship, love and develop grudge over them which leads us to sin

# Congratulations!

**Kids who did the Coloring**

Hartlyn Herchil / Crasslin Denova / Ridhun Yojit
Rishon Yojit / Johan Sanjo / Jason Eric
Eion Jayden/ Jonathan / Jeremiah / Jemima

**Children who wrote the Children's Quiz Correct Answers:**

Roshan, Shelbino, Eastrine, Annlin, Angelin

**Children who successfully did the Bible Word Search**

Roshan, Ridhun, Shelbino, Johan Sanjo,
Earline, Jason Eric, Jonathan, Eric Jaden

**Children who successfully did the Bible Cross Word**

Roshan, Ridhun, Shelbino, Johan Sanjo,
Earline, Jason Eric, Jonathan, Eric Jaden

**Children who successfully did the Word Puzzle**


Roshan, Shelbino, Eastrine, Angelin, Annlin

**June'19 - Names Missed In Manna**


Dennis - Children's Quiz

# Kids Coloring (Kinder & Beginner)







Dear Kids... Write your name... here...



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

# Bible Cross Word (Primary & Above)




1) New name of Daniel
2) How many were there inside the burning furnace when the king peeped in?
3) Name of the King who ordered Daniel to be thrown into Lion's den

6) Daniel interpreted King Nebuchadnezzar's______ with the help of God
7) Daniel and his friends were taken to which country ____
8) How many times did Daniel prayed in a day?
9) God protected Daniel in Lion's den by sending an _____
10) For ten days Daniel and his friends ate only ______ in the palace
11) One among Daniel's three friends

4) The second beast in Daniel's vision looked like a_____
5) King Nebuchadnezzar ordered the servants to heat the furnace _______ times more than the normal

Write Your Name Here…

# Bible Word Search (Beginner & Primary)

Search the star below to find the names of mothers in the Bible.

```
                Z C
                L I
              W D M R
              M T W K
            C T B W N T
            B I L H A H
X Y A B I G A I L S A L O M E X A L H U
H V C R B A T H S H E B A J S A R A H Z
  U M U B A T A M A R W F O A R X X N
    E T Y U I F I E U N I C E E V E
      H F C X W H A N N A H K B M
        E L I Z A B E T H E Z E
      S H A G A R R C S X B I K I
      M E O L E A H Y M F E L A I
    Z I P P O R A H P P B D P H N P
    T F V Q X R V     Y F C A F A F
  R A C H E L I         W K H P O T N
  D M A R Y                 S Y M K F
G A W A                         I G J X
D M                                 Q D
```



| | | |
|---|---|---|
| EVE | ZILPAH | BATHSHEBA |
| HAGAR | TAMAR | ABIGAIL |
| SARAH | JOCHEBED | ELIZABETH |
| REBEKAH | ZIPPORAH | MARY |
| LEAH | HANNAH | SALOME |
| RACHEL | NAOMI | EUNICE |
| BILHAH | RUTH | |



**Your Name:**




# வேத வினா-விடை போட்டி
## (எசேக்கியேல் 16–25)

1. கர்த்தர் எசேக்கியேல் தீர்க்கதரிசியிடம் கூறிய நீதிமானின் குணங்கள் என்ன?

2. கர்த்தர் எதனால்/எப்படி கனஈனம் பண்ண படுகிறார்?

3. அம்மோன் புத்திரருக்கு விரோதமான தீர்க்கதரிசனம் என்ன?

4. சோதோமின் அக்கிரமம் என்ன?

5. நீ பிறந்த நாளிலேயே உன் தொப்புள் அறுக்கப்பட வில்லை என்று கர்த்தர் யாரை குறிப்பிடுகிறார்?

6. கர்த்தர் எதனால் என் உக்கிரத்தை இஸ்ரவேல் வம்சத்தார் மீது ஊற்றுவேன் என்றார்?

7. பட்டயம் கூர்மையாக்க பட்டு, துலக்கப்பட்டது எதற்காக?

8. அகோலாள், அகோலிபாள் என்பதற்கு பொருள் என்ன? எசேக்கியேல் தீர்க்கதரிசி அவர்களுக்கு தெரியக் காட்டிய அவர்களுடைய அருவருப்பு யாது?

**கடந்த மாதத்திற்கான வேத வினா–விடை போட்டி விடைகள்**

1. எசே 6:12 | 2. எசே 15:6 | 3. எசே 7:2,3 | 4. எசே14:14 |
5. எசே 7:7 | 6. எசே 8:10 | 7. எசே 12:27 | 8. எசே 11:12
9. எசே 15:7 | 10. எசே 8:5 | 11. எசே 14:1 , 8:1 | 12. எசே 8:14
13 . எசே 6: 14 | 14. எசே 10:14 | 15. எசே 13:4




***July- Aug* மாதத்திற்கான விடைகள் எழுதியவர்கள்**

திருமதி. ஜோனீஷ் ஹெர்ஷெல்

திருமதி. சிந்துஜா சதீஷ்

திரு. M.C கிறிஸ்டோபர்

திருமதி. பமீலா டேனியல்

திருமதி. ஹெப்சிபாய் நேசமணி

திருமதி. ராதிகா செல்வகுமார்

திருமதி. ஜெயின் ராஜவேல்

திருமதி. அகஸ்டா லாரன்ஸ்

திருமதி. பிப்லின் நெல்சன்

திருமதி. பெட்ரீஷியா ஜேசன்

திருமதி. ரோஸ்லின் பாலாஜி

திருமதி. ஜெயந்தா ஜாண்

திருமதி. எபென் A.பிரசாத்

செல்வி. திவ்யா ஷரின்

செல்வி ஜெரின் மகதலேன்

## பிறந்தநாள் ஆசரிப்போர் Birthday Celebrants

| | |
|---|---|
| 01-Sep | Mstr. Allen Riyo |
| 02-Sep | Mrs. Shafeena |
| 04-Sep | Mrs. Jamuna Rani |
| 04-Sep | Mr. Celin Jose |
| 08-Sep | Ms. Divya Dharshini |
| 09-Sep | Ms. Abighail |
| 09-Sep | Mr. Vinith J.Samuel |
| 10-Sep | Mrs. R.Muneeswari |
| 10-Sep | Mrs. Shiby Angel |
| 11-Sep | Baby. Jemima Ashni |
| 13-Sep | Mrs. Pamela Rachel Daniel |
| 17-Sep | Mr. Nelson Sopitha Raj |
| 20-Sep | Ms. Jamie Shino Mathew |
| 21-Sep | Mr. S. Jesvin Bose |
| 23-Sep | Ms. Sharon S. Rao |
| 24-Sep | Mr. Danesh Yogendra Rao |
| 27-Sep | Ms. Pragathi |
| 28-Sep | Ms. S.Divya Sherrin |
| 29-Sep | Mrs. Sugitha Isravel |




## திருமணநாள் ஆசரிப்போர் / Wedding Anniversary

| | |
|---|---|
| 03-Sep | Mr. Chandrasekar & Mrs. P Harika Chandrasekar |
| 05-Sep | Mr. Praveen Paul & Mrs. Sugitha Isravel |
| 07-Sep | Mr. Suresh Rajan & Mrs. Anitha S Rajan |
| 08-Sep | Mr. Antony & Mrs. Esther |
| 09-Sep | Mr. Danesh Rao & Mrs. Annie Selvi |
| 16-Sep | Mr. D.Rajavel & Mrs. Jein Arputhakani |



**For by me your days will be multiplied, and years will be added to your life**
**Proverbs 9:11**

# நமது சபை உறுப்பினர்களை தெரிந்து கொள்வோம்.

| CSI Tamil Parish Family No: 021 | Mobile no: 050 666 8759 |
|---|---|
| Mr. M.C Christopher (Head) | |
| Mrs. Beeta Christopher (Wife) | |
| Ms. Jenisha Christina (Daughter)<br>Mr. Jaffrin Jerald (Son) | |
| Location in India:<br>Cathedral Colony<br>NGO A Colony<br>Tirunelveli Dist, Tamilnadu. | |



| CSI Tamil Parish Family No: 039 | Mobile no: 050 322 7592 |
|---|---|
| Mr. Saman Rajkumar (Head) | |
| Mrs. Ceciliya RajKumar (Wife) | |
| Daughters<br>Ms. Eastrine Benedicta Raj<br>Ms. Erline Bernice Raj | |
| Location in India:<br>Gandhi Nager,<br>Vellore, Tamil Nadu | |



| CSI Tamil Parish Family No: 048 | Mobile no: 056 469 8555 |
|---|---|
| Mr. George Rose (Head) | |
| Mrs. Anitha George (Wife) | |
| Mr. Gain Geroge (Son)<br>Mr. Geovin George (Son) | |
| Location in India:<br>Parakkan Vilai<br>Keelkulam Post<br>K K Dist, Tamil Nadu | |



| CSI Tamil Parish Family No: 049 | Mobile no: 055 790 5909 |
|---|---|
| Mr. Celin Jose (Head) | |
| Mrs. Anitha Jose (Wife) | |
| Location in India:<br>West Ramanputhur<br>Nagercoil<br>K K Dist, Tamilnadu. | |



| நமது மிஷினரி ஊழியத்தேவை | | |
| --- | --- | --- |
| **மிஷனரி பெயர்** | **திரு. சூரிபால் சதா** | **திரு. கிறிஸ்டோபர்** |
| **பணித்தளம்** | நீலமங்கலம், கள்ளக்குறிச்சி மாத்தூர் | மேல்முத்தானூர் குருகிலாமூர் |
| **ஸ்பான்ஸர் தொகை** | AED 450/– Month | AED 450/– Month |
| **கர்த்தர் உங்களோடு பேசுவாரனால்...நீங்களும் இந்த மிஷனரி ஊழியத்தை தாங்க முன்வாருங்கள். ஒரு குடும்பமாகவோ அல்லது பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து மிஷனரிகளை தாங்க முன்வர உங்களை அன்போடு அழைக்கிறோம்.** | | |

# ஜெபிப்போம்...

📌 நம் இந்திய நாட்டின் பொருளாதாரம் மேம்பட, வேலையில்லா திண்டாட்டம் இந்தியாவிலிருந்து முற்றிலும் அகல ஜெபிப்போம் 🙏

📌 அதிகரிக்கும் வெப்ப நிலை மற்றும் குறையும் பருவமழையால், பெரு வெள்ளமும் வறட்சியும் ஏற்படுகிறது, இதற்காக ஜெபிப்போம் 🙏

📌 பெரு வெள்ளத்தில் பாதிப்படைந்தோர் மீண்டுவர ஜெபிப்போம் 🙏

📌 நம் அரசாங்கம் துரிதமாய் எதிர்கால தண்ணீர் தேவைகளுக்கு தகுந்த நீர்த்தேக்கங்களை உருவாக்க ஜெபிப்போம் 🙏

📌 தேவனின் இரக்கம் நம் தேசத்தின் மேல் இருக்க ஜெபிப்போம் 🙏

**ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள்,**
**அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.**

*Your name / Quiz type / Month-Year*

***Church Email: csitcalain@gmail.com***

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

# DAILY BIBLE READING SEP – 2019

## "Your word is a lamp to my feet and light for my path"

| *Date* | *Morning / காலையில்* | | ✓ | *Evening / மாலையில்* | | ✓ |
|---|---|---|---|---|---|---|
| *1* | *1 கொரி 6* | 1 Corinth 6 | | *1 சாமுவேல் 25* | 1 Samuel 25 | |
| *2* | *1 கொரி 7* | *1 Corinth 7* | | *1 சாமுவேல் 26* | *1 Samuel 26* | |
| *3* | *1 கொரி 8* | *1 Corinth 8* | | *1 சாமுவேல் 27* | *1 Samuel 27* | |
| *4* | *1 கொரி 9* | *1 Corinth 9* | | *1 சாமுவேல் 27* | *1 Samuel 28* | |
| *5* | *1 கொரி 10* | *1 Corinth 10* | | *1 சாமுவேல் 28* | *1 Samuel 29 - 30* | |
| *6* | *1 கொரி 11* | *1 Corinth 11* | | *1 சாமு 29-30* | *1 Samuel 31* | |
| *7* | *1 கொரி 12* | *1 Corinth 12* | | *2 சாமுவேல் 1* | *2 Samuel 1* | |
| *8* | *1 கொரி 13* | *1 Corinth 13* | | *2 சாமுவேல் 2* | *2 Samuel 2* | |
| *9* | *1 கொரி 14* | *1 Corinth 14* | | *2 சாமுவேல் 3* | *2 Samuel 3* | |
| *10* | *1 கொரி 15* | *1 Corinth 15* | | *2 சாமுவேல் 4,5* | *2 Samuel 4 - 5* | |
| *11* | *1 கொரி 16* | *1 Corinth 16* | | *2 சாமுவேல் 6* | *2 Samuel 6* | |
| *12* | *2 கொரி 1* | *2 Corinth 1* | | *2 சாமுவேல் 7* | *2 Samuel 7* | |
| *13* | *2 கொரி 2* | *2 Corinth 2* | | *2 சாமுவேல் 8.9* | *2 Samuel 8 - 9* | |
| *14* | *2 கொரி 3* | *2 Corinth 3* | | *2 சாமுவேல் 10* | *2 Samuel 10* | |
| *15* | *2 கொரி 4* | *2 Corinth 4* | | *2 சாமுவேல் 11* | *2 Samuel 11* | |
| *16* | *2 கொரி 5* | *2 Corinth 5* | | *2 சாமுவேல் 12* | *2 Samuel 12* | |
| *17* | *2 கொரி 6* | *2 Corinth 6* | | *2 சாமுவேல் 13* | *2 Samuel 13* | |
| *18* | *2 கொரி 7* | *2 Corinth 7* | | *2 சாமுவேல் 14* | *2 Samuel 14* | |
| *19* | *2 கொரி 8* | *2 Corinth 8* | | *2 சாமுவேல் 15* | *2 Samuel 15* | |
| *20* | *2 கொரி 9* | *2 Corinth 9* | | *2 சாமுவேல் 16* | *2 Samuel 16* | |
| *21* | *2 கொரி 10* | *2 Corinth 10* | | *2 சாமுவேல் 17* | *2 Samuel 17* | |
| *22* | *2 கொரி 11* | *2 Corinth 11* | | *2 சாமுவேல் 18* | *2 Samuel 18* | |
| *23* | *2 கொரி 12* | *2 Corinth 12* | | *2 சாமுவேல் 19* | *2 Samuel 19* | |
| *24* | *2 கொரி 13* | *2 Corinth 13* | | *2 சாமுவேல் 20* | *2 Samuel 20* | |
| *25* | *கலாத்தியர் 1* | *Galatians 1* | | *2 சாமுவேல் 21* | *2 Samuel 21* | |
| *26* | *கலாத்தியர் 2* | *Galatians 2* | | *2 சாமுவேல் 22* | *2 Samuel 22* | |
| *27* | *கலாத்தியர் 3* | *Galatians 3* | | *2 சாமுவேல் 23* | *2 Samuel 23* | |
| *28* | *கலாத்தியர் 4* | *Galatians 4* | | *2 சாமுவேல் 24* | *2 Samuel 24* | |
| *29* | *கலாத்தியர் 5* | *Galatians 5* | | *1 இராஜா 1* | *1 Kings 1* | |
| *30* | *கலாத்தியர் 6* | *Galatians 6* | | *1 இராஜா 2* | *1 Kings 2* | |







**அறுப்பின் ஸ்தோத்திர பண்டிகைக்கான** ஒருநாள் வருமான காணிக்கையை செப்டம்பர் மாதம் 13ஆம் தியதி ஆலய ஆராதனையில் படைக்க அன்பாய் கேட்டுக்கொள்ளுகிறோம்

## Harvest Festival Weekly Sale (Snacks & Dinner)





**அறுப்பின் ஸ்தோத்திர பண்டிகைக்கான** Snacks **மற்றும்** Dinner **கொடுக்க விருப்பமுள்ளவர்கள்** Mrs. Sunitha Ravindra (055 602 8865) **அவர்களை தொடர்பு கொள்ளுமாறு அன்பாய் கேட்டுக்கொள்ளுகிறோம்.**









Men's Retreat games and dinner





**Men's retreat**



**Special song by Women's fellowship**



Strictly For Private Circulation

Editor: Rev. Christopher Rajendran BSC., BD., MSC. (Psy)
Po. Box. 67747. Tel/Fax +971 3 755 9630
Mobile: 056 7105 082
E-Mail: csitcalain@gmail.com. Web: csitamilparish.org